# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, மாச்சு மாதம் 22 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 4.50** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2013 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்

[2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 10/2013

## 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2013, சனவரி 1 ஆந் தேதியன்று எல்லா நோக்கங்களுக்காகவும் நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவு,''2011, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்கு இயக்குநரினால் அளிக்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்கலின் பெறுமதியின் மீது ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய தொலைத்தொடர்பு சேவைகள் கிடைக்கப்பெறுவதன்மீது 20 சதவீதப்படி தொலைத்தொடர்பு அறவீடு என அழைக்கப்படும் அறவீடொன்று தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் ''பெறுநர்'' என அழைக்கப்படுபவர்) அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,

''தொலைத்தொடர்பு அறவீடு'' என அழைக்கப்படும் அறவீடொன்று தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் ''பெறுநர்'' என அழைக்கப்படுபவர்) அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்:

(அ) 2011, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013, சனவரி 1ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காக, இருபது சதவீதத்தில்;

2-PL 007071 -1115 (2013/03)

(ஆ) 2013, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக -

(i) இணையச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது, பத்து சதவீதத்தில்; அத்துடன்

(ii) இணையச் சேவைகளின் வழங்குதல் தவிர்ந்த தொலைத்தொடர்புச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது இருபது சதவீதத்தில்.

ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய தொலைத் தொடர்புச் சேவை கிடைக்கப்பெறுவதன்மீது, இயக்குநரினால் வழங்கப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "தொலைத்தொடர்புச் சேவை" என்ற சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"தொலைத்தொடர்புச் சேவை"என்பது, 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத்தொடர்பு மற்றும் வேறு இயக்குநர் களினால் இறுதி ஒப்பப்பணம் செலுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் என்று பொருளாகு மென்பதுடன், இணையச் சேவைகளையும் உள்ளடக் கும் ; ஆனால் உள்ளூர் இயக்குநர்களுக்கும், சர்வதேசக் குடியேற்றத்திற்குமிடையிலும் உள்ளூர் இயக்குநர்களுக்கும் கடல்கடந்த தொலைத் தொடர்புக் குடியேற்றங்களுக்கும் உள்ளூர் இயக்கு நர்களுக்கும் கடல்கடந்த தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IIIஇன் 21ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் மேவப்பட்ட சர்வதேசத் தொலைத்தொடர்புச் சேவைகளுக்கு மிடையிலும் இடைத்தொடர்புச் சேவைகளையும் அணுக்கச் சேவைகளையும் உள்ளடக்கமாட்டாது.

(2) "இடைத்தொடர்புச் சேவை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"இணையச் சேவைகள்" என்பது, குறுகிய பான்ட், பரந்த பான்ட் அல்லது அர்ப்பணிக்கப்பட்ட இணைய அணுகுகை என்பனவகையாக இணையத்தை வழங்குதல் என்று பொருளாகும்.

**4.** 2013, சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்கி 2013, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது, விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக எவரேனும் பாவனையாளரிடமிருந்து முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் இயக்குநரினால் விதித்துச் சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அறவீடு இச் சட்டத்தின்கீழ் செல்லுபடியான முறையில் விதிக்கப்பட்டு அத்த கைய இயக்குநரினால் சேகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் : செல்லுபடியாக்குதல்.

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், அக்காலப் பகுதியின்போது விதித்து சேகரிக்கப்படும் ஏதேனும் அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்